**தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி : 94890 56730

தொலைபேசி: 0422 – 6611302
நிகரி: 0422 – 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

**பெறுநர்,**
ஆசிரியர்,

தேதி : 25.02.2026

**ஐயா,**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழத்தில் தலைமைப் பண்பு மேம்பாட்டு பயிற்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தில் வேளாண் பேராசிரியர்களுக்கு "கற்று செயலாற்று: தலைமை பண்பு மேம்பாடு" என்ற தலைப்பில் 25.02.2026 முதல் 27.02.2026 வரை பயிற்சி அளிக்கப்படுகிறது.

துவக்க உரையில் பேசிய பல்கலைக்கழகப் பதிவாளர் மற்றும் செயல் துணை வேந்தர் முனைவர் கா. சுப்பிரமணியன் அவர்கள் ஒரு கல்வி நிர்வாகத்தின் வெற்றிக்கு சிறந்த தலைவர்களே காரணம் என்றார். அவர்களின் தலைமை பண்பை மேம்படுத்துவதற்கு துறை சார்ந்த பயிற்சி அளிப்பது அவசியமாகிறது. இப்பண்புகளை உருவாக்கும் விதமாக எதிர்காலத்தில் தலைமைப் பொறுப்பு ஏற்கவிருக்கும் பேராசிரியர்களின் திறன்களை மேம்படுத்தும் வகையில் இப்பயிற்சி வடிவமைக்கப்பட்டுள்ளது என்றார்.

திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு இயக்குநர் முனைவர் பி. ஜெயகுமார் அவர்கள் தனது வாழ்த்துரையில் வேகமான தொழில்நுட்ப வளர்ச்சி, சிக்கலான நிர்வாக அமைப்பு ஆகியவற்றைத் திறம்பட கையாள சிறந்த நிர்வாகத் திறன் அவசியமாகிறது என்றார். இதனைக் கருத்தில் கொண்டு வேளாண் பேராசிரியர்கள் சிறந்த தொலைநோக்கு பார்வையுடன் ஒரு நிர்வாகத்தைத் தெளிவான முறையில் கையாள ஏதுவாக திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படுவதாகத் தெரிவித்தார்.

நீர் மற்றும் புவியியல் ஆய்வு மைய இயக்குநர் முனைவர் க. மகேந்திரன் அவர்கள் பேசுகையில், ஒரு நிர்வாகத்தைத் திறம்பட செயல்படுத்த மனித வள மேம்பாடு முக்கியப் பங்கு வகிக்கிறது என்றார். தலைமைத்துவத்துக்குத் தெளிவான சிந்தனையே சரியான முடிவெடுத்தலை உறுதிப்படுத்தும். மேலும், சரியான நெறிமுறைகளைக் கடைபிடித்து எடுக்கும் முடிவுகளே, சிறந்த நிர்வாகமாகக் திகழும் என்றார். அதனால் இது போன்ற பயிற்சிகள் தற்போது அவசியம் என்றார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக விதிமுறைகள் மற்றும் சட்டங்கள், நிதி மேலாண்மை மற்றும் தணிக்கை, தலைமைத்துவத்துக்கான திறன், கல்வி அமைப்பு, ஆராய்ச்சி மேலாண்மை, சட்டப்பிரச்சினைகள் மற்றும் ஒழுக்காற்று நடைமுறைகள், அலுவலக நிர்வாகத்தில் டிஜிட்டல் கருவிகள், பணியிட – வாழ்க்கை சமநிலைக்கான உணர்ச்சி நுண்ணறிவு, குழு உருவாக்கம் மற்றும் திட்டமிடல் திறன், தொழில் நுட்ப மாற்றத்தில் விரிவாக்க சேவைகள், அலுவலக நிர்வாகத்தில் இணைய பாதுகாப்பு, கல்வித்தர உறுதி ஆகிய தலைப்புகளில் இப்பயிற்சி அளிக்கப்படுகிறது.

முனைவர் ம. இரா. ஸ்ரீனிவாசன், பேராசிரியர் (பூச்சியியல்) அவர்கள் வரவேற்புரையும், முனைவர் த. சம்சாய், பேராசிரியர் (வேளாண் ஊரக மேலாண்மை), திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு இயக்ககம் அவர்கள் நன்றியுரையும் வழங்கினர். இந்நிகழ்ச்சியை IQAC ஒருங்கிணைப்பாளர் மற்றும் தோட்டக்கலை இணைப்பேராசிரியர் பெ.சா. கவிதா அவர்கள் திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு இயக்ககப் பேராசிரியர்கள் மற்றும் இதர பணியாளர்களின் உதவியுடன் ஒருங்கிணைத்தார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**